1972 ஆகஸ்ட் 18]

Renovation of Sri Karaneeswarar Temple in Saidapet

* 71 Q.—Thiru S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal to renovate the Sri Karaneeswarar Temple in Saidapet, Madras; and

(b) if so, the stage at which the matter now stands?

சைதை ஸ்ரீ காரணீஸ்வரர் கோவில் திருப்பணி

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள ஸ்ரீ காரணீஸ்வரர் கோயில் திருப்பணியை மேற்கொள்ளும் செயற்குறிப்பு ஏதும் உண்டா?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) இதற்கான மதிப்பீடுகள் ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

Mr. CHAIRMAN: Questions are over.

[குறிப்பு: ஒரு உரையின் துவக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி *, அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

அலுவல் ஆலோசனைக் குழுவின் முடிவு.

Mr. CHAIRMAN: At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. to-day, the following programme of business has been decided:

18th August 1972 (Friday)	...	1. Presentation of the First Supplementary Statement of Expenditure for 1972–73.
		2. Government Motion and Resolution.
19th August 1972 (Saturday)	...	1. The Tamil Nadu Additional Assessment and Additional Water Cess (Amendment) Bill, 1972.

	2. The Tamil Nadu Additional Assessment and Additional Water Cess (Second Amendment) Bill, 1972.
	3. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1972.
	4. The Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Kanyakumari District) Bill, 1972.
20th August 1972 (Sunday) ...	Holiday.
21st August 1972 (Monday) ...	1. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972.
	2. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1972.
22nd August 1972 (Tuesday) ...	1. Discussion on the First Supplementary Statement of Expenditure for 1972–73.
	2. The Tamil Nadu Labour Welfare Fund Bill, 1972.
	3. The Tamil Nadu Debt Relief Bill, 1972.
	4. The Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972.
23rd August 1972 (Wednesday) ...	1. The Tamil Nadu Excise Amendment Bill, 1972.
	2. The Madurai City Municipal Corporation (Amendment) Bill, 1972.
	3. The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1972.
	4. The Tamil Nadu Public Buildings (Licensing) Bill, 1972.

24th August 1972 (Thursday)	...	1. The Tamil Nadu Agricultural Labourer Fair Wages (Amendment) Bill, 1972.
		2. The Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Bill, 1972.
		3. The Tamil Nadu General Sales Tax (Fifth Amendment) Bill, 1972.
		4. The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1972.
25th August 1972 (Friday)	...	1. The Tamil Nadu Appropriation Bill, 1972.
		2. The Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1972.
		3. Other Official Bills, if any.

The Council will meet on 26th, if necessary. The Council will meet daily from 4 p.m. to 7 p.m.

3. சட்டமன்ற விதி 82-ன் கீழ் முதலமைச்சரின் விளக்க உரைகள்

(1) கடையநல்லூர் இரயில் நிலையத்தில், திருவனந்தபுரம்-சென்னை விரைவு இரயில் வண்டியும், சென்னை-திருவனந்தபுரம் பாசஞ்சர் வண்டியும் மோதிக் கொண்டது குறித்து.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கை அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 16-8-72 புதன்கிழமை, அதிகாலை 2 மணி அளவில் தென் பிராந்திய ரயில்வேயின் விருதுநகர்-தென்காசி மீட்டர்கேஜ் இருப்புப் பாதையிலுள்ள கடையநல்லூர் இரயில் நிலையத்தில் திருவனந்தபுரம்-சென்னை விரைவு இரயில் வண்டியும், சென்னை-திருவனந்தபுரம் பாசஞ்சர் வண்டியும் மோதிக் கொண்டன என்ற தகவலைக் கேட்டு வருத்தத்தில் ஆழ்ந்துள்ளோம். இந்த விபத்தின் காரணமாக 6 பேர் கடுமையான காயமடைந்தனர்; 4 பேர் சிறு காயமடைந்தனர். மேலும் 41 பயணிகளுக்கு இரயில் நிலையத்திலும், 3 பேருக்கு உள்ளூர் அரசு மருத்துவ மனையிலும் முதலுதவி அளிக்கப்பட்டது. கடுமையான